முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.27.02.2026

O.S. No.161/2024

வா.சா-1 அய்யனபிள்ளை

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

வா.சா,ஆ.1 என் அம்மாவின் இறப்பு சான்றிதழ். 13.04.2022 ல் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்து 7.5.2022 ல் வா.சா,ஆ.2 பெற்றுள்ளேன் என்றால் சரி. எனது தந்தை காணாமல் போனது சம்மந்தமாக வெள்ளிசந்தை காவல்நிலையத்தில் குற்றஎண் 58/1998 என்ற முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக எனது சாட்சியத்தில் கூறியுள்ளேன். அந்த குற்றஅறிக்கை நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. காவல்நிலையத்தில் அளித்த புகாரின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எனது காணாமல் போய் 24 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை காலதாமதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ.4 குடும்ப அட்டை 2005 முதல் 2009 காலகட்டத்திற்குரியது. அதில் எனது அப்பா பெயர் உள்ளது என்றால் உள்ளது. 1998 ல் காணமால் போன என் அப்பாவின் பெயர் 2005 குடும்ப அட்டையில் உள்ளது என்றால் சரி.

2005 ல் என் அப்பாவிற்கு கிடைக்க வேண்டிய ரேசன் பொருட்களை நாங்கள் வாங்கினோம் என்றால் சரி. உண்மையில் 27.2.1998 ல்எனது அப்பா காணாமால் போயிருந்தால் வா.சா,ஆ 4.ல் என் அப்பா பெயரை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. என் அப்பா காணாமால் போனதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தேனா என்றால் இல்லை. 20.8.2024 ல் வா.சா,ஆ.3 ஆவணத்தை நகல் கேட்டு நான் விண்ணப்பித்தேன் என்றால் சரி. பிறப்பு இறப்பு பதிவாளர் இந்த வழக்கிற்கு

தரப்பினர் என்றாலும் அவரை சேர்க்காததால் இந்த வழக்கு ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. உண்மையில் 27.2.1998 ல் எனது அப்பா காணாமால் போயிருந்தால் அது தொடர்பாக எல்லா நடவடிக்கையும் நான் எடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நகல் உரிய காலத்தில் பெற்று நான் வழக்கு தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. காலதாமதாக இந்த வழக்கை தாக்கல் செய்து இருப்பதால் பிரதியின் செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.